தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

## 140 அடியைத் தாண்டியது முல்லைப் பெரியாறு அணை: கேரளத்துக்கு வெள்ள அபாய எச்சரிக்கை



முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டம் வெள்ளிக்கிழமை காலை 140 அடியாக உயர்ந்தது. இதையடுத்து, கேரள தலைமைச் செயலருக்கும், இடுக்கி மாவட்ட ஆட்சியருக்கும் முதல் கட்ட வெள்ள அபாய எச்சரிக்கை குறித்த தகவலை தமிழக பொதுப் பணித் துறை அதிகாரிகள் அனுப்பி உள்ளனர். முல்லைப் பெரியாறு அணையில் 142 அடி தண்ணீர் தேக்க உச்ச நீதிமன்றம் கடந்த மே 7-இல் உத்தரவிட்டது. அந்தத் தீர்ப்பின்படி அணையில் 142 அடி தண்ணீரைத் தேக்கும் வகையில், கடந்த ஜூலை 17-இல், பெரியாறு அணையை மத்திய நீர்வள ஆணையத்தின் தலைவர் நாதன் தலைமையில் பார்வையிட்ட மூவர் கண்காணிப்புக் குழுவினர், அணையின் 13 கதவணைகளை இறக்கினர். இந்த நிலையில், கடந்த 2 மாதங்களாக அணையின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்த தென்மேற்குப் பருவ மழையாலும், தற்போது பெய்து வரும் வடகிழக்குப் பருவ மழையாலும் அணையின் நீர்வரத்து அதிகரித்துள்ளது. மேலும், அணையிலிருந்து கடந்த வாரம் அதிக அளவு தண்ணீர் வெளியேறுவதை நிறுத்தி 142 அடி தண்ணீரைத் தேக்கி உச்ச நீதிமன்றத் தீர்ப்பை உறுதிப்படுத்த வேண்டுமென விவசாயிகள் வலியுறுத்தினர். அணையிலிருந்து தமிழகத்துக்கு நீர் வெளியேற்றும் அளவு குறைக்கப்பட்டதால், அணையின் நீர்மட்டம் வேகமாக உயரத் தொடங்கியது. வெள்ளிக்கிழமை காலை அணையின் நீர்மட்டம் 140 அடியானது. இதையடுத்து, தமிழக பொதுப் பணித் துறை அதிகாரிகள்,

தேனி மாவட்ட ஆட்சியர் கே.எஸ். பழனிசாமி உள்ளிட்டோர் கேரள தலைமைச் செயலர், கேரள நீர்ப்பாசனத் துறையினர், இடுக்கி மாவட்ட ஆட்சியர் அஜித்குமார் பாட்டீல் பகவத்ராவ் ஆகியோருக்கு முறையாக தகவல் அனுப்பினர். அத்துடன், முல்லைப் பெரியாறு அணையிலிருந்து இடுக்கி அணை வரை வசிப்பவர்களுக்கு முதல் கட்ட வெள்ள அபாய எச்சரிக்கை விடுவது குறித்த தகவலையும் அனுப்பினர். **வெள்ளிக்கிழமை மாலை நிலவரம்**: 152 அடியுள்ள பெரியாறு அணையின் நீர்மட்டம் 140.30 அடியாக இருந்தது. அணைக்கு நீர்வரத்து நொடிக்கு 1,916 கன அடியிலிருந்து 2,500 கன அடியாக உயர்ந்துள்ளது. மேலும், அணையிலிருந்து காலை வரை நொடிக்கு 456 கன அடி தண்ணீர் மட்டுமே தமிழகத்துக்கு திறந்து விடப்பட்டது. இந்த நிலையில், மாலையில் தண்ணீர் திறப்பு 900 கன அடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது. அணையில் மொத்த நீர் இருப்பு 7,126 மில்லியன் கன அடியாக உயர்ந்துள்ளது. மத்திய நீர்வள ஆணையத்தின் உத்தரவின் பேரில், 1979-ஆம் ஆண்டு முல்லைப் பெரியாறு அணையில் மராமத்துப் பணிகள் தொடங்கிய பிறகே, கடந்த 35 ஆண்டுகளில் 12 முறை பெரியாறு அணையின் நீர்மட்டம் 136 அடி வரை உயர்ந்துள்ளது. கடந்த 13.11.1979 அன்று அணையின் நீர்மட்டம் 143.70 அடியாக உயர்ந்தது. தற்போது 36 ஆண்டுகளுக்குப் பிறகு அணையின் நீர்மட்டம் 140 அடியை தாண்டியுள்ளது குறிப்பிடத்தக்கது. தொடர்ந்து அணைக்கு நீர்வரத்து இருக்கும் பட்சத்தில் இன்னும் ஓரிரு நாள்களில் தமிழகத்தின் ஒட்டுமொத்த மக்களின் எதிர்பார்ப்பான 142 அடியை எட்டிவிடும் எனத் தெரிகிறது.

**<u>தமிழகம், புதுச்சேரியில் மழை நீடிக்கும்: வானிலை அறிவிப்பு</u>**

வங்கக்கடலில் உருவாகியுள்ள புதிய மேலடுக்கு சுழற்சி காரணமாக தமிழகம் மற்றும் புதுச்சேரியில் மழை நீடிக்கும் ம் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. மேலும் இதுகுறித்து

வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் சென்னையைப் பொறுத்தவரை வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். சில இடங்களில் விட்டு விட்டு மழை பெய்யும் என்று கூறப்பட்டுள்ளது.

## மேட்டூர் அணை நீர்மட்டம் உயருகிறது



காவிரி டெல்டா பாசனத்துக்கு மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறந்து விடுவது நிறுத்தப்பட்டதால், அணையின் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது. காவிரி டெல்டா மாவட்டங்களில் தற்போது மழை பெய்து வருவதால், மேட்டூர் அணையிலிருந்து டெல்டா பாசனத்துக்கு தண்ணீர் திறந்து விடுவது வியாழக்கிழமை காலை நிறுத்தப்பட்டது. மேலும், தற்போது காவிரியின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் மழை பெய்து வருவதால், அணைக்கு நீர்வரத்து நொடிக்கு 6,744 கன அடியாக அதிகரித்தது. இதனால், வியாழக்கிழமை காலை 101.44 அடியாக இருந்த அணையின் நீர்மட்டம், வெள்ளிக்கிழமை காலை 101.80 அடியாக உயர்ந்தது. அணையிலிருந்து கிழக்கு, மேற்குக் கால்வாய் பாசனத்துக்கு நொடிக்கு 500 கன அடி வீதம் தண்ணீர் திறந்து விடப்படுகிறது. அணையின் நீர் இருப்பு 66.72 டி.எம்.சி.யாக இருந்தது. காவிரியின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் தொடர்ந்து மழை பெய்து வருவதால், அணையின் நீர்மட்டம் மேலும் உயரும் வாய்ப்பு உள்ளது என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

## நெல்லை மாவட்டத்தில் பலத்த மழை: சேர்வலாறு நீர்மட்டம் 3 அடி உயர்வு

திருநெல்வேலி மாவட்டத்தில் வெள்ளிக்கிழமை பரவலாக பலத்த மழை பெய்தது. நீர்ப்பிடிப்புப் பகுதியில் பெய்த மழையால், சேர்வலாறு அணையின் நீர்மட்டம் 3 அடி உயர்ந்துள்ளது. மணிமுத்தாறு அணை வெள்ளிக்கிழமை மூடப்பட்டது. மன்னார் பகுதியில் நிலைகொண்டுள்ள

காற்றழுத்தத் தாழ்வுப் பகுதியால், தமிழகத்தில் சில தினங்களாக மழை பெய்து வருகிறது. திருநெல்வேலி மாவட்டத்தில் வியாழக்கிழமை இரவு முதல் இடியுடன் கூடிய பலத்த மழை பெய்ய தொடங்கியது. திருநெல் வேலி, பாளையங்கோட்டை, அம்பாசமுத்திரம், சேரன்மகாதேவி, கல்லிடைக்குறிச்சி உள்பட மாவட்டத்தில் பல்வேறு பகுதியில் வெள்ளிக்கிழமை வரை நீடித்தது. அணைகளின் நீர்ப்பிடிப்புப் பகுதியிலும் மழை நீடித்ததால், மணிமுத்தாறு அணை மூடப்பட்டது. பாபநாசம் அணையிலிருந்து பாசனத்துக்குத் திறக்கப்படும் நீரின் அளவு 500 கனஅடியாகக் குறைக்கப்பட்டது. வெள்ளிக்கிழமை காலை 8 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் அணைப் பகுதிகளிலும் பிற இடங்களிலும் பதிவான மழை அளவு (மி.மீட்டரில்): பாபநாசம் அணை 60, பாபநாசம் கீழ் அணை 23, சேர்வலாறு அணை 19, மணிமுத்தாறு அணை 27.2, கருப்பாநதி அணை 8, குண்டாறு அணை 3.1, கொடுமுடியாறு அணை 15, பேச்சிப்பாறை அணை 59, பெருஞ்சாணி அணை 2. திருநெல்வேலி 13, பாளையங்கோட்டை 16, அம்பாசமுத்திரம் 10, சேரன்மகாதேவி 32, செங்கோட்டை 1.2, தென்காசி 3.2, ஆய்க்குடி 5.2, ஆலங்குளம் 1.2, நான்குனேரி 1, கன்னடியன் அணைக்கட்டு 26, ஸ்ரீவைகுண்டம் 2. நீர்வரத்து அதிகரிப்பு: பாபநாசம் அணைக்கு விநாடிக்கு 2,000 கனஅடியும், சேர்வலாறு அணைக்கு 1,500 கனஅடியும், மணிமுத்தாறு அணைக்கு 246 கனஅடியும் நீர்வரத்து இருந்தது. கடனாநதி, ராமநதி, கருப்பாநதி உள்ளிட்ட அணைகளுக்கு நீர்வரத்து குறைந்து காணப்படுகிறது. பாபநாசம் அணையின் நீர்மட்டம் 1.10 அடி உயர்ந்து 112.60 அடியாகவும், சேர்வலாறு அணை நீர்மட்டம் 3 அடி உயர்ந்து 124.29 அடியாகவும் இருந்தது. மணிமுத்தாறு அணை 80.40 அடி, கடனாநதி அணை 74.40 அடி, ராமநதி அணை 81.50 அடி, கருப்பாநதி அணை 67.42 அடி, குண்டாறு அணை 36.10 அடி, அடவிநயினார் அணை 106.75 அடி, வடக்குப் பச்சையாறு அணை 22.00

அடி, நம்பியாறு அணை 14 அடி, கொடுமுடியாறு அணை 34.75 அடி என்ற அளவில் அணைகளில் நீர்மட்டம் உள்ளது. இந்த மழையால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கையில் பாதிப்பு ஏற்பட்டது. பள்ளி, கல்லூரி மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர்.

**செம்பரம்பாக்கம் ஏரிக்கு நீர்வரத்து அதிகரிப்பு**



செம்பரம்பாக்கம் ஏரிக்கு வியாழக்கிழமை காலை நிலவரப்படி வினாடிக்கு 1200 கன அடி நீர் வரத்து உள்ளது. சென்னையின் குடிநீர் தேவையைப் பூர்த்தி செய்யும் ஏரிகளில் செம்பரம்பாக்கம் ஏரி முக்கியப் பங்கு வகிக்கிறது. இந்த ஏரியின் மொத்தக் கொள்ளளவு 3645 மில்லியன் கன அடி. உயரம் 24 அடி. கடந்த ஒரு மாதத்திற்கு முன்பு வரை ஏரியின் நீர்மட்ட உயரம் 11 அடிக்கும் குறைவாகவே இருந்து வந்தது. இந்த நிலையில் கடந்த சில நாள்களாக பெய்து வரும் தொடர் மழையினால் ஏரியின் நீர்மட்டம் படிப்படியாக உயர்ந்து வருகிறது. சிறிய இடைவெளிக்குப் பிறகு செவ்வாய்க்கிழமை மீண்டும் மழை துவங்கியுள்ளதால் ஏரியின் நீர்வரத்து அதிகரித்து வருகிறது. ஏரியின் நீர்வரத்து வியாழக்கிழமை காலை 6 மணி நிலவரப்படி வினாடிக்கு 1200 கன அடியாக உள்ளது. ஏரியின் நீர்மட்டம் 13 அடியாகவும், கொள்ளளவு 1214 மில்லியன் கன அடியாகவும் உள்ளது. மழை நீடிப்பதால், ஏரியின் நீர்மட்டம் மேலும் உயர வாய்ப்புள்ளதாக பொதுப்பணித் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

**வைகை அணையில் பாசனத்துக்கு கூடுதல் தண்ணீர் திறப்பு**

வைகை அணையில் இருந்து புதன்கிழமை முதல் திண்டுக்கல், மதுரை மாவட்ட பாசனத்துக்காக கூடுதல் தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது.

வைகை அணையில் இருந்து திண்டுக்கல், மதுரை மாவட்ட பாசனத்துக் காக 1600 கன அடி தண்ணீர் திறக்கப்பட்டு வந்தது. கடந்த 5-ஆம் தேதி முதல் 100 கன அடி கூடுதலாக திறந்துவிடப்பட்டது. இதன் மூலம் மொத்தம் 1700 கன அடியும், குடிநீருக்கு 60 கன அடி என மொத்தம் 1760 கன அடி தண்ணீர் திறந்து விடப்பட்டு வந்தது. இந்நிலையில் வியாழக்கிழமை(நவ.13) முதல் கூடுதலாக 100 கன அடி தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. இதன் மூலம் 1800 கன அடி தண்ணீர் திண்டுக்கல் மற்றும் மதுரை மாவட்ட பாசனத்திற்கும், 60 கன அடி தண்ணீர் தேனி, மதுரை மற்றும் ஆண்டிபட்டி-ப் சடபட்டி குடிநீர் திட்டத்துக்குமாக மொத்தம் 1860 கன அடி திறந்து விடப்பட்டுள்ளது.

## <u>நத்தம் பகுதியில் மானாவாரி பயிர்கள் விளைச்சல் அமோகம்</u>

கடந்த சில வாரங்களாக நத்தம் பகுதியில் விட்டுவிட்டு மழை பெய்து வந்தது. இதையொட்டி இப்பகுதியில் மானாவாரியாக விதைக்கப்பட்ட சோளம், கம்பு, கேப்பை, கேழ்வரகு மற்றும் பயிறு வகைகள் வளர்ந்து தற்போது பசுமையாக காட்சி அளிக்கின்றன. இதையடுத்து பசுமாடுகள் உள்பட கால்நடைகள் வளர்ப்போர் மாட்டுத் தீவனத்திற்கென்றே விதைக்கப்பட்டிருந்த சோளப் பயிர்களை அறுவடை செய்து வருகின்றனர். இதனால் கால்நடைகளுக்கு தேவையான தீவனத் தட்டுப்பாடு குறைந்துள்ளது.

## <u>தொடர் மழை: கடம்பூர் மலைப் பகுதியில் புதிய அருவிகள்</u>

சத்தியமங்கலம், கடம்பூர் மலைப் பகுதியில் பெய்த தொடர் மழையின் காரணமாக புதிய அருவிகள் உருவாகியுள்ளன. சில வாரங்களாக சத்தி புலிகள் காப்பகத்தில் கன மழை பெய்து வருவதால் பெரும்பாலான குளம், குட்டைகள் நிரம்பிவிட்டன. கடம்பூர், மல்லியம்மன் துர்க்கம், குன்றி, மாக்கம்பாளையம், அருகியம், கூத்தம்பாளையம், இருட்டிபாளையம் உள்ளிட்ட வனக் கிராமங்களில் கன மழை பெய்து வருகிறது. மழையின்

காரணமாக வனப்பகுதி பச்சைப்பசேலென காட்சியளிக்கிறது. சிற்றோடைகள், பள்ளங்களில் ஓடும் நீர், பாறைகளின் வழியாக 10-க்கும் மேற்பட்ட இடங்களில் அருவியாக கொட்டுகிறது. கே.என்.பாளையத் திலிருந்து கடம்பூர் செல்லும் மலைப் பாதையில் இந்த அருவிகள் தோன்றியுள்ளதால் மலைப் பாதையில் பயணிப்பவர்கள் அருவிகளை ரசித்தபடி செல்கின்றனர். நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்துள்ளதால் விவசாயிகளின் உழவுப் பணி தீவிரமாக நடந்து வருகிறது. கசிவுநீர்க் குட்டைகள், தடுப்பணைகள் நிரம்பிவிட்டதால் யானைகள் நடமாட்டம் குறைந்துவிட்டதாக வனத்துறையினர் தெரிவித்தனர்.

## <u>நீலகிரியில் தொடர் மழை</u>

நீலகிரி மாவட்டத்தில் தொடர்ந்து பெய்து வரும் பலத்த மழையின் காரணமாக பல்வேறு பகுதிகளில் மண் சரிவுகள் ஏற்பட்டுள்ளன. வடகிழக்கு பருவமழையின் காரணமாக குன்னூர், கோத்தகிரி பகுதிகள் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளன. கடந்த 2 நாள்களாக பெய்த பலத்த மழையின் காரணமாக கோத்தகிரி பகுதியில் மட்டும் சுமார் 22 இடங்களில் மண் சரிவு ஏற்பட்டுள்ளன. மரங்கள் வேரோடு பெயர்ந்து விழுந்துள்ளன. மாவட்டத்தில் வெள்ளிக்கிழமை காலை வரையிலான 24 மணி நேரத்தில் 802 மி.மீ. மழை பதிவாகியுள்ளது. இதில், அதிகபட்சமாக அவலாஞ்சியில் 95 மி.மீ. மழை பதிவாகியிருந்தது.

## <u>100 மெட்ரிக் டன் யூரியா தருவிப்பு</u>

புதுவை மாநிலத்தில் யூரியா தட்டுப்பாட்டைப் போக்கும் வகையில் முதல் கட்டமாக 100 மெ.டன் யூரியா தருவிக்கப்பட்டுள்ளது என்று வேளாண் மைத் துறை இயக்குநர் அ.ராமமூர்த்தி தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: ஒவ்வொரு மாதமும் மத்திய அரசின் ரசாயன உர அமைச்சகம் மூலம் புதுவை மாநிலத்துக்கு தேவையான பல்வேறு வகையான உரங்கள் ஒதுக்கீடு செய்யப்படுகின்றன. அதன்

அடிப்படையில் நமது மாநிலத்துக்கு தேவையான உரங்களை உர உற்பத்தியாளர்கள் மற்றும் உர இறக்குமதியாளர்கள் கூட்டுறவு மற்றும் தனியார் நிறுவனங்கள் மூலம் விவசாயிகளுக்கு விற்பனை செய்கின்றனர். இந்நிலையில் மத்திய அரசு நாப்தா மூலம் உற்பத்தி செய்யும் யூரியாவை தவிர்த்து இயற்கை எரிவாயு வாயிலாக யூரியாவை உற்பத்தி செய்ய அறிவுறுத்தி உள்ளது. யூரியா உற்பத்தி செலவைக் குறைக்கும் நோக்கில் மத்திய அரசின் வழிகாட்டுதலை யூரியா நிறுவனங்கள் பின்பற்றாததால் அதற்கான மானியத்தை மத்திய அரசு நிறுத்தி விட்டது. இதன் விளைவாக தமிழகத்தில் யூரியா உற்பத்தி செய்யும் ஸ்பிக் மற்றும் எம்எப்எல் நிறுவனங்கள் தங்கள் யூரியா உற்பத்தியை நிறுத்தி விட்டன. இதனால் புதுவையில் யூரியா தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதைக்கருத்தில் கொண்டு புதுவை வேளாண் துறை மத்திய அரசை அணுகி இறக்குமதியாளர்கள் மூலம் யூரியாவைப் பெற முயற்சி மேற்கொண்டது. இதைத் தொடர்ந்து ஐபிஎல், கொரமண்டல் நிறுவனங்கள் மூலம் யூரியாவை பெறத்திட்டமிடப்பட்டு நவம்பர் மாதத்தில் 2000 மெ.டன் யூரியாவை தர அவை விருப்பம் தெரிவித்தன. முதல்கட்டமாக விவசாயிகள் பயன்பாட்டுக்காக 100 மெ.டன் யூரியா உரத்தை தருவித்து விநியோகம் செய்ய வேளாண்துறை ஏற்பாடு செய்துள்ளது. எனவே விவசாயிகள் யூரியா உர தட்டுப்பாடு குறித்து கவலை அடையத் தேவையில்லை என தெரிவித்துள்ளார் ராமமூர்த்தி.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**9 மாவட்டங்களுக்கு 2,600மெட்ரிக் டன் யூரியா வருகை**

வேலூர்: ஒன்பது மாவட்டங்களுக்கு வழங்குவதற்காக, காட்பாடி வேளாண் உரம் குடோனுக்கு, ரயில் மூலம், 2,600 மெட்ரிக் டன் யூரியா வந்தது.இதை பார்வையிட்டு, கலெக்டர் நந்தகோபால் கூறியதாவது:

காட்பாடி வேளாண் உர குடோனுக்கு, நாகர்ஜுனா என்ற யூரியா, 2,600 மெட்ரிக் டன் வந்துள்ளது. இதில், வேலூர் மாவட்டத்திற்கு, 597 மெட்ரிக் டன், காஞ்சிபுரம் மாவட்டத்திற்கு, 258, திருவள்ளூர் மாவட்டத்திற்கு, 546, விழுப்புரம் மாவட்டத்திற்கு, 68, கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு, 440, கடலூர் மாவட்டத்திற்கு, 307, திருவண்ணாமலை மாவட்டத்திற்கு, 316, சேலம் மாவட்டத்திற்கு, 17 டன், தர்மபுரி மாவட்டத்திற்கு, 51 மெட்ரிக் டன் யூரியா வந்துள்ளது.இங்கிருந்து, அந்தந்த மாவட்டத்திற்கு, லாரிகள் மூலம் அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. வேலூர் மாவட் டத்திற்கு வந்துள்ள, 597 மெட்ரிக் டன் யூரியா, விவசாயிகளுக்கு உரக் கடைகள் மூலம் விற்பனை செய்யப்படும்.ஏற்கனவே, 1,300 மெட்ரிக் டன் யூரியா இருப்பு உள்ளது. தற்போது வந்துள்ள, 597 சேர்ந்து மொத்தம், 1,897 மெட்ரிக் டன், தற்போது இருப்பு உள்ளது. இதனால், விவசாயி களுக்கு தட்டுப்பாடின்றி யூரியா கிடைக்கும். இதை, வேளாண் விற்பனை கடைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.இவ்வாறு கூறினார்.வேளாண்மை இணை இயக்குனர் ஜெசுந்தர், துணை இயக்குனர் நெப்போலியன், உதவி இயக்குனர்கள் சத்தியமூர்த்தி, சோமு, வேளாண் அலுவலர்கள் முருகன், வீணை பிரியா, பிரிதா ஆகியோர் உடனிருந்தனர்.

**<u>உரங்கள் தட்டுப்பாடின்றி வழங்க வேளாண் துறை நடவடிக்கை</u>**

ழுப்புரம்: சம்பா சாகுபடி அதிகரித்து, உரங்கள் தட்டுப் பாடின்றி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. வேளாண் இணை இயக்குனர் ராஜாமணி விடுத்துள்ள செய்திக்குறிப்பு: வடக்கிழக்கு பருவமழை பரவலாக பெய்வதால், சம்பா சாகுபடி பணி நடக்கிறது. முன்னணி நிறுவனங்களில் உர உற்பத்தி குறைந்ததால் உரம் சப்ளை செய்வதில் குறைபாடு உள்ளது. இதை தவிர்க்க வேளாண் துறை சார்பில் பல மாநிலங்களில் இருந்து யூரியா உட்பட உரங்கள் வாங்கி வினியோகம் செய்யப்படுகிறது. உரங்கள் பதுக்கி, அதிக விலைக்கு விற்கப்பதாக தகவல் வந்தது. வேளாண்மை உதவி இயக்குனர் தலைமையில்

கண்காணிப்பு குழு அமைத்து மாவட்டத்தில் உள்ள தனியார் உரக்கடைகள் மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. ஆய்வில், உரிய உர இருப்பு பதிவேடு, பில் புத்தகம், தகவல் பலகை பராமரிக்காத உரக்கடைகளின் உரிமம் தற்காலிகமாக ரத்து செய்யப்பட்டுள்ளது. இம்மாதம் இது வரை யூரியா உரங்கள் 1941 மெட்ரிக் டன் தனியார் உரக் கடைகளுக்கும், 1824 மெட்ரிக் டன் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களுக்கும் பெற்று வினியோகம் செய்யப்பட்டுள்ளது. வடக்கிழக்கு பருவ மழையின் மூலம் கிடைக்கும் மழையளவு குறையாமல் கிடைக்கும் பட்சத்தில் பயிர் சாகுபடி பரப்பு அதிகரிக்கக் கூடும் என்பதால் கூடுதலாக 1000 மெட்ரிக் டன் யூரியா சப்ளை செய்ய அரசுக்கு கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது. இன்னும் 10 நாட்களுக்குள் இப்கோ, கிரிப்கோ, கொரமண்டல், நாகர்ஜூனா நிறுவனங்கள் மூலம் யூரியா உரங்களை சப்ளை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. டிஏபி, பொட்டாஷ், காம்ப்ளக்ஸ் உரங்கள் தேவையான அரசு தனியார் மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. உரங்கள் கிடைப்பதில் இடர்பாடுகள் இருந்தால் வேளாண்மை இணை இயக்குனர் அலுவலக கண்காணிப்பு குழுவை 04146-222291 தொலைபேசி மூலம் விவசாயிகள் தொடர்பு கொள்ளலாம்.

## எல்லீஸ் அணைப்பகுதியில் 97 மி.மீ., மழை பதிவு

ருவெண்ணெய்நல்லூர்: திருவெண்ணெய் நல்லூர் அருகே எல்லீஸ் அணைப்பகுதியில் நேற்று 97 மி.மீ., மழை பதிவானது. வங்கக்கடலில் ஏற்பட்டுள்ள குறைந்தழுத்த தாழ்வு நிலையால் கடந்த சில தினங்களாக தமிழகத்தின் பல்வேறு பகுதியில் கனமழை பெய்து வருகிறது. நேற்று காலை 8:00 மணி நிலவரப்படி திருவெண்ணெய்நல்லூர் அடுத்த எல்லீஸ் அணைக்கட்டு பகுதியில் 97 மி.மீ., மழையும், உளுந்தூர்பேட்டையில் நேற்று காலை 6:00 மணி நிலவரப்படி 66 மி.மீ., மழையும் பதிவானது.

## பசுந்தாள் உரம் பயன்படுத்துவதில் கள்ளக்குறிச்சி விவசாயிகள் ஆர்வம்

யாகதுருகம்: நெல் நடவு நிலங்களில் பசுந்தாள் உரங்களை பயன்படுத்துவதில் கள்ளக்குறிச்சி பகுதி விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். தென்மேற்கு பருவ மழை குறைந்ததன் எதிரொலியால் சம்பா பருவ நெல் சாகுபடி பாதித்து நடவு பணிகள் தாமதமாகின. சமீபத்தில் கல்வராயன் மலையில் பெய்த மழையால் கோமுகி, மணிமுக்தா அணைகளுக்கு நீர்வரத்து கிடைத்து விவசாயிகளுக்கு நம்பிக்கை கொடுத்துள்ளது. இதையடுத்து நெல் நடவு பணிகள் கள்ளக்குறிச்சி பகுதியில் தீவிரமாக நடந்து வருகிறது. நாற்று நடுவதற்கு ஏற்ற வகையில் வயலை உழுது ரசாயன உரங்களை தூவி நடவு செய்வது வழக்கம். இதை தவிர்த்து பாரம்பரிய முறையான பசுந்தாள் உரங்களை பயன்படுத்துவதில் விவசாயிகளின் ஆர்வம் திரும்பியுள்ளது. வயலை ஒட்டி வளர்க்கப்படும் மரங்களின் இலைகளை வெட்டி நடவு வயல் சேற்றில் புதைப்பதால் சில தினங்களில் அது அழுகி உரமாக மாறுகிறது. இதனால் நெற்பயிர் ஊட்டத்துடன் வளர்கிறது. சணப்பை, எருக்கு, நுணா, பூவரசு, காட்டுவாகை உள்ளிட்ட தழைகளை பசுந்தாள் உரமாக பயன்படுத்துகின்றனர். இதனால் பயிர்கள் செழித்து வளர்ந்து கூடுதல் மகசூலை கொடுக்கிறது.ரசாயன உரங்களை பயன்படுத்தாமல் இயற்கை முறை ஊட்டச் சத்துக்களை கொண்டு பயிர் வளர்வதால் உற்பத்தியாகும் தானியங்கள் உடல் ஆரோக்கியத்தை கொடுக்கின்றன.

## பண்ணை மகளிர் குழுவிற்கு வேளாண்மை துறை பயிற்சி

விழுப்புரம்; விழுப்புரம் மாவட்டத்தில் அம்மா பண்ணை மகளிர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 21 வட்டாரங்களில் பண்ணை மகளிர் குழுக்கள் அமைக்கப் பட்டுள்ளது. மாவட்ட வேளாண்மைத்துறையின் சார்பில் 2014-15ம் ஆண்டில் அம்மா பண்ணை மகளிர் குழுக்கள் துவக்கப்பட உள்ளன. வேளாண்மையில் பண்ணை மகளிரின் பங்கை

கருத்தில் கொண்டு, அவர்களின் சமூக மற்றும் பொருளாதார நிலையை உயர்த்த, அம்மா பண்ணை மகளிர் மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப் படுகிறது. இத்திட்டத்தில் மாவட்டத்தில் உள்ள 21 வட்டாரங்களில் 30 பண்ணை மகளிர் குழுக்கள் அமைக்கப் பட்டுள்ளது. சிறு, குறு பண்ணை மகளிரை (20 நபர்கள்) ஒருங்கிணைத்து குழுக்கள் உருவாக்கப் பட்டுள்ளது. அம்மா பண்ணை மகளிர் மேம்பாட்டுத் திட்ட அறிந்துணர்வு பயிற்சி, பண்ணை மகளிர் குழு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டது. இப்பயிற்சியினை, விழுப்புரம் வேளாண்மைத்துறை இணை இயக்குனர் (பொது) ராஜாமணி துவக்கி வைத்தார். வேளாண்மை துணை இயக்குனர்கள் ராஜேந்திரன், சண்முகம் ஆகியோர் திட்ட செயல்பாடுகளை விளக்கி பேசினர்.

## <u>பண்ணை குட்டைகள் நிரம்பின</u>

தியாகதுருகம்: கிராமப்புறங்களில் அமைக்கப்பட்ட பண்ணை குட்டைகள் நிரம்பியதால் மழைநீர் வீணாகாமல் நிலத்தடி நீர்மட்டம் உயர காரணமாக உள்ளது. கிராமங்களில் உள்ள தரிசு மற்றும் தனியார் நிலங்களில் பண்ணை குட்டை அமைக்கும் திட்டத்தை அரசு செயல்படுத்தி வருகிறது. மழை காலங்களில் கிடைக்கும் நீர் வீணாகாமல் தேக்கிவைத்து நிலத்தில் உறிஞ்சப்படுவதால் நிலத்தடி நீர்மட்டம் உயர வழி வகுக்கிறது. விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள 22 ஒன்றியங்களிலும் தலா 200 பண்ணை குட்டைகள் அமைக்க இலக்கு நிர்ணயித்து தற்போது 100 க்கும் மேற்பட்ட குட்டைகள் அமைக்கப்பட்டுள்ளன. இப்பணிகள் தேசிய வேலை உறுதியளிப்பு திட்ட பயனாளிகளை கொண்டு மேற்கொள்ளப்படுகிறது. கடந்த சில தினங்களாக பெய்து வரும் மழை காரணமாக கிடைத்த நீர் பண்ணை குட்டைகளில் சேகரமாகி நிரம்பியுள்ளன. இதனால் இப்பகுதியில் நிலத்தடி நீர்மட்டம் மெல்ல உயர்ந்து வருகிறது. தரிசு நிலங்களில் பண்ணை குட்டைகளை

அதிகளவில் அமைத்து மழை நீர் வீணாகாமல் சேமிக்கும் வகையில் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

## பயிர் கடன் உதவி

மஞ்சூர் : மணிஹட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தின் சார்பில், விவசாயிகளுக்கு ரூ.15 லட்சம் பயிர் கடன் வழங்கப்பட்டது. மஞ்சூர் அருகே மணிஹட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில், 800க்கும் மேற்பட்டவர்கள் விவசாயிகள் உறுப்பினர்களாக உள்ளனர். விவசாயிகளுக்கு பயிர் கடன் வழங்கும் நிகழ்ச்சி வங்கி வளாகத்தில் நடந்தது. கூட்டுறவு கடன் சங்க தலைவர் சிவக்குமார் தலைமை வகித்தார். துணைத்தலைவர் மகேஷ்குமார் முன்னிலை வகித்தார். இதில், கூட்டுறவு கடன் சங்கத்தை சேர்ந்த 25 பயனாளிகளுக்கு மொத்தம் 15 லட்சத்து 30 ஆயிரம் ரூபாய் கடனுதவி வழங்கப்பட்டது. விழாவில் இயக்குனர்கள் ஆல்துரை, செந்தில், மோகன்ராஜ் மற்றும் விவசாயிகள் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர். முடிவில் வங்கி செயலாளர் சுப்ரமணி நன்றி கூறினார்.

## மழை காரணமாக வரத்து குறைவு வாழைத்தார் விலை திடீர் உயர்வு

வேலாயுதம்பாளையம்,: தொடர் மழையின் காரணமாக, வாழைத்தார் விலை உயர்ந்ததால், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்து உள்ளனர்.கரூர் மாவட்டம் வேலாயுதம்பாளையம், புகழூர், திருக்காடுதுறை, நொய்யல், மரவாபாளையம், சேமங்கி, முத்தனூர், நடையனூர், கோம்புப்பாளையம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் ஆயிரக்கணக்கான ஏக்கரில் விவசாயிகள் வாழை பயிரிட்டுள்ளனர். இங்கு விளையும் வாழைத்தார்களை உள்ளூர் பகுதிகளில் உள்ள கடைகளுக்கும், வியாபரிகளுக்கும் விற்பனை செய்கின்றனர். சில வியாபாரிகள் வாழைத் தோட்டத்தை குத்தகைக்கு எடுத்துள்ளனர்.வாழைத் தோட்டத்தில் விளையும் வாழைத்தார்களை விவசாயிகளிடமிருந்து வியாபாரிகள் வாங்கி லாரிகள் மூலம், திண்டுக்கல், மதுரை, திருச்சி, கரூர், ஈரோடு,

கோவை நாமக்கல், நீலகிரி, சேலம் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களுக்கும், ஆந்திரா, கேரளா, கர்நாடகா, உத்திரபிரதேசம் உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களுக்கும் லாரிகள் மூலம் அனுப்பி வைக்கின்றனர்.கடந்த வாரத்தில் பூவன் வாழைத்தார் ஒன்று.150 ரூபாய்க்கும், ரஸ்தாலி வாழைத்தார், 200 ரூபாய்க்கும், கற்பூரவள்ளி வாழைத்தார், 150 ரூபாய்க்கும், பச்சை நாடன் வாழைத்தார், 200 ரூபாய்க்கும், மொந்தன் வாழைத்தார், 400 ரூபாய்க்கும் வியாபாரிகள் வாங்கிச்சென்றனர்.நேற்று பூவன் வழைத்தார், 100 ரூபாய் உயர்ந்து, 250 ரூாபய்க்கும், ரஸ்தாலி வாழைத்தார், 250 ரூபாய்க்கும், கற்பூரவள்ளி வாழைத்தார், 200 ரூபாய்க்கும், பச்சை நாடன் வாழைத்தார், 300 ரூபாய்க்கும், மொந்தன் வாழைக்காய் தார் ஒன்றுக்கு, 300 ரூபாய் அதிகரித்து, 700க்கும் விற்கப்பட்டது. தொடர் மழையின் காரணமாக, வரத்து குறைவினால் வாழைத்தார் விலை உயர்ந்துள்ளது. வாழைத்தார் விலை உயர்ந்துள்ளதால் வாழை பயிரிட்டுள்ள விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## <u>பெரம்பலூர் மாவட்டத்தில் 3 ஏரிகள் நிரம்பியது</u>

பெரம்பலூர்,நவ.15- பெரம்பலூர் மாவட்டத்தில் அரும்பாவூர் பெரிய ஏரி, வெங்கலம் சின்ன ஏரி, பாண்டகபாடி ஏரி ஆகிய 3 ஏரிகள் நிரம்பி உள்ளன. பெரம்பலூர் மாவட்டத்தின் ஆண்டு சராசரி மழையளவு 908.மில்லி மீட்டர் ஆகும். 2014ம் ஆண்டில் நவ., 14ம் தேதி வரை மொத்தம் 777.40 மில்லி மீட்டர் மழை பெய்துள்ளது. இந்த மழையினால் மாவட்டத்தில் பொதுப்பணித்துறையினரால் பராமரிக்கப்பட்டு வரும் அரும்பாவூர் பெரிய ஏரி, வெங்கலம் சின்ன ஏரி, பாண்டகபாடி ஏரி ஆகிய 3 ஏரிகள் முழு கொள்ளவிற்கு நீர் நிரம்பியுள்ளது. வடக்கலூர், தேனூர், நெற்குணம் ஆகிய 3 ஏரிகள் 75 சதவீதத்திற்கு மேலும், தொண்ட மாந்துறை, பில்லங்குளம், வெங்கனூர், வெண்பாவூர், எழுமூர், ஆய்க்குடி, கை.களத்தூர் ஏரிகள் 50 சதவீதத்திற்கு மேலும், பெரம்பலூர் கீழேரி,

லாடபுரம் பெரிய ஏரி, கை.பெரம்பலூர், காரியானூர் ஏரி, கீரவாடி ஏரி, கண்ணப்பாடி ஏரி, குரும்பலூர் ஏரி, செட்டிக்குளம், டி.களத்தூர் பெரிய ஏரி, டி.களத்தூர் சிறிய ஏரி, வெங்கலம் பெரிய ஏரி, தொண்டப்பாடி ஏரி, நூத்தப்பூர் ஏரி, நெய்க்குப்பை ஏரி, சாத்தனவாடி ஏரி ஆகிய ஏரிகள் 25 சதவீதத்திற்கு மேலும் நிரம்பியுள்ளன. பெரம்பலூர் மாவட்டத்தில் பொதுப்பணித்துறையினரால் பராமரிக்கப்படும் 73 ஏரிகளில், மீதமுள்ள 45 ஏரிகள் 25 சதவீதத்திற்கு குறைவாகவும் நீர் நிரம்பியுள்ளன.

## <u>தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்த விவசாயிகளுக்கு தஞ்சை கலெக்டர் அறிவுரை</u>

தஞ்சாவூர் :பாசனத்துக்கு தண்ணீர் பிரச்னை இல்லையென்றால் கூட, விவசாயிகள் தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்த வேண்டும் என, நேர்காணல் முகாமில் கலெக்டர் சுப்பையன் தெரிவித்தார்.தஞ்சாவூர் மாவட்டம் பாபநாசம் அருகில் உள்ள கோவிந்த நாட்டுச்சேரியில் மக்கள் நேர்காணல் முகாம் நடந்தது. இதில் கலெக்டர் சுப்பையன், 271 பேருக்கு, 10 லட்சத்து, நான்காயிரத்து, 900 ரூபாய் மதிப்பில் நலத்திட்ட உதவி வழங்கி பேசியதாவது:முகாம் நடத்துவதற்கு ஒரு மாதத்துக்கு முன், அந்த பகுதி மக்களுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு, பெறப்பட்ட மனுக்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு, நலத்திட்ட உதவி வழங்கப்படுகிறது.சமுதாய கூடம், சாலை வசதி, குடிநீர் வசதி குறித்து பஞ்., தலைவர் கோரிக்கை விடுத்துள்ளார். இது உடனடியக பரிசீலிக்கப்பட்டு, செய்து கொடுக்கப்படும். கலெக்டரிடம் மட்டும் தான் மனு கொடுக்க வேண்டுமென நினைக்கக்கூடாது. மக்கள் பிரதிநிதி மற்றும் துறை அலுவலர்களிடம் மனுக்கள் கொடுத்தாலும் உடனடியாக நிறைவேற்றி கொடுக்கப்படும். தஞ்சை மாவட்டத்தில் பாசனத்துக்காக தண்ணீர் பிரச்னை இல்லை. இப்பகுதி விவசாயிகள் தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்த வேண்டும்.மழை காலமாக உள்ளதால், கிராமப்புறங்களில் உள்ள ஒவ்வொருவரும், தங்களது வீடுகளை சுத்தமாக

வைத்திருப்பதுடன், சுற்றுப்புறத்தையும் தூய்மையாக வைத்து கொள்ள வேண்டும். நோய் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளும் அலுவலர்களுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.மாவட்டத்தில், இந்த மாத இறுதியில், 30 லட்சம் மரக்கன்று நடும் மிகப்பெரிய திட்டம் நிறைவேற்றப்படவுள்ளது. மழை வளம் பெருகவும், மண் வளம் காக்கவும், அனைவரும், ஏதாவது ஒரு இடத்தில் மரக்கன்று நட்டு பராமரிக்க வேண்டும்.அப்போது தான் வறட்சி நம்மை நெருங்காது. பசுமை தஞ்சாவூராக, நமது மாவட்டம் பெருமையடையும். இதற்கு பொதுமக்களின் ஒத்துழைப்பு அவசியமாகும்.இவ்வாறு தெரிவித்தார்.இதைதொடர்ந்து தோட்ட கலைத்துறை சார்பில் மாங்கன்றுகள், வீரிய வெண்டை விதை, கோ கோ கன்று, மூங்கில் கன்றுகள் இலவசமாக வழங்கப்பட்டது.முகாமில் எம்.எல்.ஏ.க்கள் துரைக்கண்ணு, சமூக பாதுகாப்பு திட்ட துணை கலெக்டர் ஜனனி சவுந்தர்யா, ஊராட்சி பஞ்., ஜனவா பரமசிவம் உட்பட பலர் பங்கேற்றனர்.

## நெல்லையில் பலத்த மழை குற்றால அருவிகள் கொட்டுது

திருநெல்வேலி: நெல்லையில் நேற்றும் பரவலாக மழை பெய்தது. திருநெல்வேலி மாவட்டத்தில் நேற்று பரவலாக மழை பெய்தது. நெல்லை ஜங்ஷன் பகுதியில் மழையினால் தேங்கிய தண்ணீரால் வாகனங்களில் சென்றவர்கள் மிகுந்த சிரமத்திற்குள்ளாகினர். தொடர் மழையினால் மாவட்டம் முழுவதும் விவசாய பணிகள் மும்முரமாக நடந்துவருகிறது. குற்றாலம் மெயின்அருவியில் நேற்று காலை வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. பின்னர் தண்ணீர் குறைந்தது. ஐந்தருவி, பழைய குற்றாலம் உள்ளிட்ட அனைத்து அருவிகளிலும் தண்ணீர் கொட்டியது.

இன்றைய வேளாண் செய்திகள்

**போளூர் அருகே நடவு முறை நாற்றங்கால் வேளாண்மை அதிகாரி ஆய்வு**

போளூர்,: போளூர் ஒன்றியம் ஜடதாரிகுப்பத்தில் நடவுமுறை துவரை நாற்றங்காலை வேளாண்மை இணை இயக�குநர் எம்.ஜெயசந்திரன் ஆய்வு செய்தார். போளூர் ஒன்றியம் ஜடதாரிகுப்பம் கிராமத்தில் விவசாயி அ.குப்பன் என்பவர் தனது நிலத்தில் போளூர் வேளாண்மைத் துறையிடம் விதை பெற்று நடவு முறை துவரை நாற்றங்கால் அமைத்துள்ளார். இந்த நடவு முறை துவரை நாற்றங்காலை வேளாண்மை இணை இயக�குநர் எம்.ஜெயச்சந்திரன் ஆய்வு செய்தார். அப்போது வேளாண்மை உதவி இயக�குநர் அ.வடமலை, வேளாண்மை உதவி அலுவலர்கள் என்.சித்ரா, க.ராஜாராம் ஆகியோர் உடனிருந்தனர்.

**3 நாட்களாக தொடர்மழைபெரம்பலூர் மாவட்டத்தில் 3 ஏரிகள் நிரம்பி வழிகின்றன**

பெரம்பலூர்,: பெரம்பலூர் மாவட்டத்தில் 3 நாட்களாகத் தொடர்மழை பெய்து வருகிறது. இதனால் அரும்பாவூர் பெரியஏரி, வெங்கலம் சின்னஏரி, பாண்டகப்பாடி ஏரி என 3 ஏரிகள் நிரம்பி வழிகின்றன. பெரம்பலூர் மாவட்டத்தில் பொதுப்பணித்துறை கட்டுப்பாட்டில் மொத்தம் 73 ஏரிகள் உள்ளன. மாவட்ட அளவில் கடந்த 11ம் தேதி 93 மிமீ மழைபெய்தது. இதில் தழுதாழை பாயிண்ட்டில் மட்டும் 43 மிமீ மழையளவு பதிவாகியது. அதே போல 12ம்தேதி மாவட்ட அளவில் 104 மிமீ மழை பெய்தது. இதில் தழுதாழை பாயிண்ட்டில் மட்டும் 33.60 மிமீ மழையளவு பதிவாகியது. 13ம் தேதி மாவட்டஅளவில் 93.60 மிமீ மழை

பெய்தது. இதில் தழுதாழை பாயிண்ட்டில் மட்டும் 67.60 மிமீ மழையளவு பதிவாகியுள்ளது. தொடர்ச்சியாக தழுதாழை சுற்றுவட்டாரத்தில் மிக அதிப்படியான மழை பெய்து வந்ததால் 4 ஆண்டுகளுக்குப் பிறகு அரும்பாவூர் பெரிய ஏரி நேற்று காலையில் இருந்து நிரம்பி வழியத் தொடங்கியுள்ளது. இந்த பெரியஏரி 52.63 மில்லியன் கனஅடி கொள்ளளவு கொண்டதாகும். இங்கிருந்து வழிகின்ற தண்ணீர் ஆற்றோடு வீணாக சென்று விடாமல் தடுத்து நிறுத்தப்பட்டு, அருகிலுள்ள சித்தேரிக்குத் திருப்பி விடப்பட்டுள்ளது. 18.11 மில்லியன் கனஅடி கொள்ளளவு கொண்ட சித்தேரி நேற்று வரை 5 சதவீதம் கூட நிரம்பாமல் உள்ளுக்குள் மாடுகள் மேய்ந்த நிலையில்தான் இருந்தது. இந்த இரண்டு ஏரிகளின் மூலம் சுற்றுவட்டாரத்திலுள்ள 228.07 எக்டேர் ஆயக்கட்டு பகுதி பாசனவசதி பெற்றுப் பயன்பெறும் வாய்ப்புள்ளது. இதே போல, தழுதாழை பகுதியின் கனமழையால் அருகிலுள்ள வெங்கலம் சின்ன ஏரியும், பாண்டகப்பாடி ஏரியும் நேற்று முதல் நிரம்பி வழிகிறது. தொடர் மழை மீண்டும் தொடர்ந்தால் தேனூர் ஏரி, வடக்கலூர் ஏரி, நெற்குணம் ஏரி ஆகியன இன்றோ, நாளையோ நிரம்பி வழியும் நிலையில் உள்ளது. இந்நிலையில் பெரம்பலூர் மாவட்டத்தில் நடப்பாண்டு முதன்முறையாக அரும்பாவூர் பெரிய ஏரி நிரம்பி வழிவது குறித்த தகவலறிந்த கலெக்டர் தரேஸ் அகமது நேற்று ஏரிக்கு சென்று பார்வையிட்டார். அப்போது அங்கிருந்த அரும் பாவூர் பேரூராட்சித்தலைவர் சோலைராமசாமி, பெரம்பலூர்மாவட்ட (மருதையாறு உபவடிநிலக்கோட்டம்) பொதுப்பணித்துறை உதவி செயற்பொறியாளர் வேல்முருகன் ஆகியோரிடம் பெரிய ஏரியின் முந்தையநிலை குறித்துக் கேட்டறிந்தார். அங்கிருந்த இளைஞர்கள் கலெக்டரிடம், இந்த ஏரி புதர்கள் மண்டிக்கிடப்பதால் முழுமையாகத் தண்ணீர் தேங்க வழியின்றி உள்ளது. 50 ஆண்டுகளுக்கு முந்தைய பெரிய ஏரி மிகப்பெரிதாக இருந்தது. பலரால் ஆக்கிரமிக்கப்பட்டும், தூர்ந்தும் சிறிதாகிவிட்டது எனத் தெரிவித்தனர். இதனைத்தொடர்ந்து, கருவேல மரங்களும்,

மண்மேடுகளும், புதர்களும் மண்டிக்கிடப்பதை அகற்றி ஏரியின் கொள்ளவை உயர்த்தத் தேவையான புதிய கருத்துரு தயாரிக்கும்படி பொதுப்பணித்துறை பொறியாளர்களுக்கு அறிவுறுத்தினார். பிறகு கொட்டாரக்குன்று சாலை வழியாக பெரிய ஏரிக்கான நீர்வரத்து அமைந் துள்ள பெரியசாமிகோயில் அணைக்கட்டு பகுதியையும் பார்வையிட்டார். நிகழ்ச்சியின் போது, பொதுப்பணித்துறை இளநிலைப் பொறியாளர் பாலசுப்ரமணியன் உடனிருந்தார்.நிரம்பும் நிலையில் 7 ஏரிகள் பெரம்பலூர் மாவட்டத்தில் 3 ஏரிகள் நிரம்பி வழிவதைப் போல, மாவட்டத்தில் தேனூர் ஏரி, வடக்கலூர் ஏரி, நெற்குணம் ஏரி ஆகிய 3 ஏரிகள் 75 சதவீதம் முதல் 100 சதவீதம் வரை கொள்ளவை எட்டியுள்ளன. தொண்டமாந்துறை, பில்லங்குளம், வெங்கனூர், வெண்பாவூர், எழுமூர், ஆய்குடி, கை.களத்தூர் ஆகிய ஏழு ஏரிகள் 50 சதவீதம் முதல் 75 சதவீதம்வரை நிரம்பியுள்ளன. மீதமுள்ள 60 ஏரிகள் 50 சதவீதத்திற்கு குறைவான கொள்ளளவில் தான் உள்ளன என பொதுப்பணித்துறை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## ஆலத்தூர் பகுதியில் மழை விவசாயிகள் மகிழ்ச்சி

பாடாலூர், : பெரம்பலூர் மாவட்டம் ஆலத்தூர் தாலுகா பகுதிகளில் உள்ள கிராமங்களில் விவசாயிகள் தங்கள் நிலங்களில் வெங்காயம், பருத்தி, மக்காச்சோளம், சோளம், நிலக்கடலை, மிளகாய் உள்ளிட்ட விவசாயப் பயிர்கள் சாகுபடி செய்துள்ளனர். கிணற்று பாசனத்தை மட்டுமே நம்பி பயிர் செய்துள்ள விவசாயிகளின் கிணற்றில் இதுவரை ஊற்று பிடிக்கவில்லை. இதுவரை பெய்த மழையால் ஆலத்தூர் தாலுகா பகுதி கிராமங்களில் நிலத்தடி நீர் மட்டம் உயராமலே உள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர். அதனால் விவசாயிகள் தங்கள் நிலங்களில் பயிர் செய்துள்ள விவசாயப் பயிர்கள் முழுமையாக சாகுபடி செய்யும் வரை கிணற்றில் நீர் இல்லாததால் தண்ணீர் பற்றாக்குறை ஏற்படும் என கவலையுடன் தெரிவித்தனர். இந்நிலையில் கடந்த இரு தினங்களாக ஆலத்தூர் தாலுகா பகுதி கிராமங்களான பாடா லூர், இரூர், ஆலத்தூர்,

நாட்டார்மங்கலம், செட்டிகுளம், மாவலிங்கை, கொளக்காநத்தம், காரை, தெரணி உள்ளிட்ட பல்வேறு கிராமங்களிலும் பரவலாக மழை பெய்தது. மேலும், மாலை யில் சுமார் ஒரு மணி நேரத்திற்கும் மேலாக விடாமல் மழை பெய்தது. கடந்த இரு நாட்களாக ஆலத்தூர் தாலுகா பகுதியில் பெய்து வரும் மழை யால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்ததுடன் வெங்காயம், மிளகாய் போன்ற பயிர்கள் நடவு செய்ய மிகவும் பயனுள்ள வகையில் இருப்பதாகவும் தெரிவித்தனர்.

## விவசாயிகளுக்கு விதை உற்பத்தி தொழில்நுட்ப பயிற்சி

பாடாலூர், : குரூரில் விவசாயிகளுக்கு விதை உற்பத்தி தொழில்நுட்ப பயிற்சி நடைபெற்றது. ஆலத்தூர் தாலுகா குரூர் கிராமத்தில் விதை கிராமத் திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு விதை உற்பத்தி தொழில் நுட்ப பயிறசி நடைபெற்றது. பயிற்சிக்கு ஆலத்தூர் வேளாண் உதவி இயக்குனர் அண்ணாதுரை தலைமை வகித்தார். பெரம்பலூர் மாவட்ட வேளாண் இணை இயக்குனர் அழகிரிசாமி, வேளாண் துணை இயக்குனர் அய்யாசாமி, உழவர் பயிற்சி நிலைய மேலாண்மை துணை இயக்குனர் ஆறுமுகம், விதைச்சான்று வேளாண் உதவி இயக்குனர் பழனிசாமி ஆகியோர் கலந்துக் கொண்டு விதை உற்பத்தி தொழில் நுட்பத்தைப் பற்றி விவசாயிகளுக்கு பயிற்சி அளித்தனர்.இதில் குரூர் கிராமத்தைச் சேர்ந்த 100 விவசாயிகள் கலந்து கொண்டனர். பயிற்சியில் குருர் கிராமத்தைச் சேர்ந்த முன்னோடி விவசாயி மலர்கொடி தரமான சான்றுவிதை உற்பத்தி பற்றிய தனது அனுபவங்களை எடுத்துக் கூறினார். ஆலத்தூர் துணை வேளாண்அலுவலர் ராமச்சந்திரன் நன்றி கூறினார். பயிற்சிக்கான ஏற்பாடுகளை உதவி வேளாண் அலுவலர்கள் மணிகண்டன், துரைசாமி, கலியபெருமாள் ஆகியோர் செய்திருந்தனர்.

## செந்துறை வட்டாரத்தில் தோட்டக்கலை அதிகாரி வயல்களில் ஆய்வு

ஜெயங்கொண்டம், : செந்துறை வேளாண்மை வட்டாரத்தில், வேளாண்மை இணை இயக்குனர் குணசேகரன், துணை இயக்குனர்

மனோகரன், தோட்டக்கலைத்துறை துணை இயக்குனர் சுப்பையா ஆகியோர்கொண்ட குழுவினர், உஞ்சினி கிராமத்தில் வோ ளாண்மை, தோட்டகலை துறை மூலம் செயல்படுத்தப்படும் திட்டப்பணிகளை ஆய்வு மேற்கொண்டனர். உஞ்சினி கிராமத்தில் சேகர் என்பவரின் பண்ணை குட்டையில் மீன் வளர்ப்பு குட்டை, வீரப்பன் என்பவரது வயலில் தொட்டியில் மண்புழு வளர்ப்பு, பஞ்சநாதன்என்பவரது வயலில் சோலார் மின்சாரம் மூலம் இயக்கப்படும் பம்புசெட் ஆகியவற்றை ஆய்வு செய்தனர். ஆய்வின்போது, விவசாயிகள் வேளாண்மை மற்றும் தோட்டகலைத்துறை அலுவலர்களை அணுகி, பயிர்களின் மகசூலை அதிகரிக்க நவீன தொழில்நுட்பங்களை கடைபிடித்து லாபம் பெறவேண்டும் எனக்கூறினர். மேலும் தோட்டக்கலைத்துறை மூலம் வழங்கப்பட்ட வீரிய ஒட்டு முந்திரி பயிரிடபட்ட வயல்களை அதிகாரிகள் ஆய்வு செய் தனர். செந்துறை வேளாண் மை உதவி இயக்குனர் ராஜசேகரன், வேளாண்மை அலுவலர் கலைசெல்வி, துணை அலுவலர் ராமசந்திரன், அட்மா தொழில் நுட்ப மேலாளர் செந்தில்குமார், உதவி அலுவலர்கள் ஆனந்தி, மலர்கொடி, தேவி, இந்துஜா மற்றும் மோகன்ராஜ், பெரியசாமி, சோமசுந்தரம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>விவசாயிகள் பயிர் காப்பீடு செய்வது அவசியம் மாவட்ட கலெக்டர் வேண்டுகோள்</u>**

கூடுதல் மழை பெய்த போதிலும் வறட்சி ஏற்பட வாய்ப்பு இருப்பதால், பயிர் காப்பீடு செய்ய விவசாயிகள் முன்வர வேண்டும் என்று கலெக்டர் வெங்கடாசலம் வேண்டுகோள் விடுத்துள்ளார். கூடுதல் மழைப்பொழிவு திண்டுக்கல் மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழை தீவிரமாக பெய்து

வருகிறது. கடந்த மாதம் வரை பெய்ய வேண்டிய சராசரி மழை அளவை காட்டிலும், கூடுதலாக 166 மில்லி மீட்டர் மழை அதிகமாக பெய்துள்ளது. இதனால் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் விவசாய பணிகள் மும்முரமாக நடக்கிறது. இந்தநிலையில் ராபி பருவ நெல் சாகுபடி செய்யும் விவசாயிகள் அனைவரும் பயிர் காப்பீடு செய்யுமாறு, கலெக்டர் வெங்கடாசலம் வேண்டுகோள் விடுத்துள்ளார். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:-

திண்டுக்கல் மாவட்டத்தில் ஒரே நாளில் அதிக மழைப்பொழிவு இருப்பதால் வெள்ள சேதமும், சில பிர்க்காவில் மழைப்பொழிவு குறைந்திருப்பதால் வறட்சியும் நிலவ வாய்ப்பு உள்ளது.

குறுகிய கால கடன் குறுகிய கால கடன், கே.சி.சி. திட்ட கடன், நகையீட்டு கடன் பெற்ற விவசாயிகள் வேளாண் காப்பீடு திட்டத்தின் கீழ் சேரலாம். இதேபோல் கடன் பெறாத விவசாயிகளும் திட்டத்தில் சேர தகுதியுடையவர்கள் ஆவர். காப்பீடு திட்டத்தில் சேருவதற்கு இன்று (சனிக்கிழமை) கடைசி நாள் ஆகும். எனவே திண்டுக்கல் மாவட்டத்தில் நெல் பயிரிடும் அனைத்து விவசாயிகளும் காப்பீடு திட்டத்தில் சேர்ந்து பயன் அடையலாம். இவ்வாறு கலெக்டர் வெங்கடாசலம் தெரிவித்துள்ளார்.

## தஞ்சை மாவட்டத்தில் பரவலாக மழை ஈச்சன்விடுதியில் அதிகபட்சமாக 86 மி.மீட்டர் பதிவானது

தஞ்சை மாவட்டத்தில் பரவலாக மழை பெய்து வருகிறது. ஈச்சன்விடுதியில் அதிகபட்சமாக 86 மி.மீட்டர் பதிவானது.

பரவலான மழை வங்க கடலில் குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை உருவானதால் தமிழகத்தில் பல இடங்களில் பரவலாக மழை பெய்து வருகிறது. தஞ்சை மாவட்டத்திலும் நேற்று முன்தினம் மாலை முதல் மழை பெய்தது. பின்னர் அவ்வப்போது விட்டு, விட்டு மழை பெய்து வந்தது. நேற்றுகாலை 6 மணி அளவில் பலத்த மழை பெய்தது. இந்த

மழை சிறிது நேரம் நீடித்தது. பின்பு இடைவெளி விட்டு, விட்டு மழை பெய்து கொண்டே இருந்தது. இதனால் தாழ்வான பகுதிகளில் தண்ணீர் தேங்கி நின்றது. தஞ்சை கரந்தை பகுதியில் மெயின்சாலையில் மழைநீருடன் கழிவுநீரும் கலந்து தேங்கி நின்றது. கரந்தை பஸ் நிறுத்தம் நிழற்குடையின் கீழ் மழை தண்ணீர் தேங்கி நின்றது. இதனால் பயணிகள் மழைக்கு கூட ஒதுங்கி நிற்க இடம் இன்றி குடை கொண்டு வராத பொதுமக்கள் மழையில் நனைந்து கொண்டு பஸ்சிற்காக காத்து நின்றனர். அந்த நிழற்குடைக்கு பின்புறம் உள்ள நகராட்சி பள்ளி வளாகத்திலும் தண்ணீர் குளம்போல் தேங்கி நின்றது. இதேபோல் அதிராம்பட்டினம், கும்பகோணம், பாபநாசம், திருவையாறு, வல்லம், பட்டுக்கோட்டை, பேராவூரணி என மாவட்டம் முழுவதும் பரவலாக மழைபெய்தது.

அளவு

தற்போது தஞ்சை மாவட்டத்தில் சம்பா சாகுபடி செய்யப்பட்டுள்ளது. பரவலான மழையின் காரணமாக தாழ்வான பகுதிகளில் நடவு செய்யப்பட்டிருந்த சம்பா நெற்பயிர்கள் ஓரிரு இடங்களில் தண்ணீரில் மூழ்கியுள்ளன. இந்த மழையினால் தஞ்சை நகரில் பல்வேறு இடங்களில் சாலைகள் பெயர்ந்து குண்டும், குழியுமாக காட்சி அளிக்கிறது. தஞ்சை மாவட்டத்தில் ஈச்சன்விடுதியில் அதிகபட்சமாக 86 மில்லிமீட்டர் மழையும், அய்யம்பேட்டையில் குறைந்தபட்சமாக 10 மில்லிமீட்டர் மழையும் பெய்துள்ளது. தஞ்சை மாவட்டத்தில் நேற்றுகாலை 8 மணியுடன் கூடிய 24 மணி நேரத்தில் பெய்த மழைஅளவு மில்லிமீட்டரில் வருமாறு:-

அதிராம்பட்டினம்-70.1, கும்பகோணம்-19, பாபநாசம்-11, தஞ்சை-20, திருவையாறு-15, திருக்காட்டுப்பள்ளி-11.8, வல்லம்-33, கல்லணை-43.6, அய்யம்பேட்டை-10, திருவிடைமருதூர்-37.4, மஞ்சலாறு-67.8, நெய்வாசல்தென்பாதி-15, பூதலூர்-16.6, வெட்டிக்காடு-22.2, ஈச்சன்விடுதி-86, ஒரத்தநாடு-10.8, மதுக்கூர்-28.6, பட்டுக்கோட்டை-43,

பேராவூரணி-76, அணைக்கரை-40.8, குருங்குளம்-20. தஞ்சை மாவட்டத்தில் மொத்தம் 698.10 மில்லிமீட்டர் மழை பெய்துள்ளது. சராசரி மழைஅளவு 33.24 மில்லிமீட்டர் ஆகும். இந்த ஆண்டு தஞ்சை மாவட்டத்தில் இதுவரை 666.40 மில்லிமீட்டர் மழை பெய்துள்ளது. கடந்த ஆண்டு 549.11 மில்லிமீட்டர் தான் மழை பெய்து இருந்தது குறிப்பிடத்தக்கது.

## திருச்சி மாவட்டத்தில் விடிய, விடிய பலத்த மழை வாத்தலையில் அதிகபட்சமாக 70 மில்லி மீட்டர் பதிவானது

திருச்சி மாவட்டத்தில் விடிய, விடிய பலத்த மழை பெய்தது. வாத்தலையில் அதிகபட்சமாக 70 மில்லி மீட்டர் பதிவானது.

விடிய,விடியமழை

வங்க கடலில் உருவான குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக தமிழகம் முழுவதும் பரவலாக மழை பெய்து வருகிறது. திருச்சியில் நேற்று முன்தினம் இரவு விட்டு விட்டு மழை பெய்தது. நள்ளிரவு முதல் விடிய, விடிய பலத்த மழை பெய்தது. இதனால் சாலைகளில் மழை நீர் வெள்ளம் போல தேங்கியது. தாழ்வான பகுதிகளில் தண்ணீர் புகுந்தது. திருச்சி உதவி கலெக்டர் அலுவலகம் அருகே மழையினால் பழமையான மரம் ஒன்றின் கிளை ஒடிந்து விழுந்தது. மாவட்டம் முழுவதும் நேற்று முன்தினம் இரவு முதல் விடிய, விடிய மழை பெய்தது. திருச்சியில் தொடர் மழை காரணமாக மத்திய பஸ் நிலையம் அருகே வ.உ.சி. சாலை, ராக்கின்ஸ் ரோடு, ரெயில்வே கூடுதல் நுழைவு பாதை உள்ளிட்ட சாலைகளில் மண் அரிப்பு ஏற்பட்டு சில இடங்களில் பள்ளம் உருவானது. இதனால் சாலைகளில் வாகனங்களில் செல்வோர் கடும் அவதி அடைந்து வருகின்றனர். குண்டும், குழியுமான சாலைகளை சீரமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மழையளவு

திருச்சி மாவட்டத்தில் நேற்று காலை 8 மணி நேர நிலவரப்படி பெய்த

மழையளவு விவரம் மில்லி மீட்டரில் வருமாறு:- லால்குடி-23 (மி.மீ.), மணப்பாறை-20.60, முசிறி-48.30, புள்ளம்பாடி-17.40, தா.பேட்டை-5.30, துறையூர்-5, விமானநிலையம்-26.80, டவுண்-26.80, மருங்காபுரி-11.20, பொன்னனியாறு அணை-34.60, நவலூர்குட்டப்பட்டு-27.20, நந்தியாறு அணை-16.20, கல்லக்குடி-6.10, வாத்தலை -70, சமயபுரம்-38, தேவிமங்கலம்-13.40, சிறுகுடி-10, புலிவலம்-50, குப்பம்பட்டி-3, கோவில்பட்டி-27.20, தென்பெறநாடு-10, பொன்மலை-25, திருச்சி ஜங்ஷன்-29.20, துவாக்குடி-42. மாவட்டம் முழுவதும் மொத்தம் 586.30 மில்லி மீட்டர் அளவு மழை பெய்திருந்தது. சராசரியாக 23.45 மில்லி மீட்டர் அளவு பதிவானது.

## <u>மாவட்டத்தில் அதிகபட்சமாக குடியாத்தத்தில் 32.2 மில்லிமீட்டர் மழை பதிவு</u>

வேலூர் மாவட்டத்தில் அதிகபட்சமாக குடியாத்தத்தில் 32.2 மில்லி மீட்டர் பதிவானது. தொடர்ந்து நேற்றும் பரவலாக மழை பெய்தது.
தொடர்மழை
வேலூர் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் கடந்த சில நாட்களாக அவ்வப்போது மழை விட்டு விட்டு பெய்து வருகிறது. இந்த நிலையில் நேற்று முன்தினம் காலை முதல் நேற்று வரை பரவலாக மழை பெய்து வருகிறது. நேற்றும் வேலூரில் காலை முதல் இரவு வரை தொடர்ந்து மழை பெய்தது. இந்த மழைக்கு வேலூர் முள்ளிப்பாளையம், சம்பத் நகர் பகுதியை சேர்ந்த கோவிந்தம்மாள் (வயது 60) என்பவர் வீட்டின் பக்கவாட்டு சுவர் இடிந்து விழுந்தது. நேற்று முன்தினம் இரவிலும் தொடர்ந்து மழை விட்டு விட்டு பெய்து கொண்டே இருந்தது. 3–வது நாளாக நேற்று காலையும் மழை பெய்தது. அதைத்தொடர்ந்து அவ்வப்போது விட்டு, விட்டு லேசான மழை பெய்தது. அதேபோல் வேலூர் மாவட்டத்தில் ஆம்பூர், வாணியம்பாடி, திருப்பத்தூர், குடியாத்தம், அணைக்கட்டு, வாலாஜா, ஆற்காடு, ராணிப்பேட்டை,

சோளிங்கர், அரக்கோணம் பகுதிகளிலும் 3–வது நாளாக பரவலாக மழை பெய்தது. வேலூர் மாவட்டத்தில் மழையின் அளவு குறைவாக இருந்தால் நேற்று பள்ளிகளுக்கு விடுமுறை அளிக்கவில்லை. மரண பள்ளம் மழையின் காரணமாக வேலூர் மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் சாலைகள் சேதம் அடைந்துள்ளன. வேலூரில் இருந்து ஆரணி செல்லும் தேசிய நெடுஞ்சாலையில் துத்திப்பட்டு அருகே சாலையின் ஓரத்தில் மழைநீர் அரித்து சென்றதால் மரண பள்ளம் ஏற்பட்டுள்ளது. இந்த சாலையில் தினமும் ஆயிரக்கணக்கான வாகனங்கள் சென்று வருகின்றன. எனவே, அசம்பாவிதம் ஏற்படும் முன்பு அதனை சரி செய்ய வேண்டும் என்று பொதுமக்கள் எதிர்பார்க்கின்றனர். குடியாத்தத்தில் அதிகபட்சம் வேலூர் மாவட்டத்தில் அதிகபட்சமாக குடியாத்தத்தில் 32.2 மில்லி மீட்டர் மழை பதிவானது. மற்ற பகுதியில் நேற்று முன்தினம் காலை 8 மணி முதல் நேற்று காலை 8 மணி வரை பதிவான மழை அளவு மில்லிமீட்டரில்வருமாறு:–

ஆலங்காயம் –30.4, வேலூர் –25.8, ஆற்காடு –22.2, ஆம்பூர் –22, மேல்ஆலத்தூர் –19.4, காவேரிப்பாக்கம் –8.4, சோளிங்கர் –7, வாணியம்பாடி –5.6, அரக்கோணம் –4, திருப்பத்தூர் –3.1, வாலாஜா –3. மொத்தம் 183.10 மில்லிமீட்டரும், சராசரியாக 15.26 மில்லிமீட்டரும் பதிவாகி உள்ளது. தொடர்ந்து மழை பெய்து வருவதால் வேலூர் மாவட்டத்தில் நிலத்தடி நீர்மட்டம் சராசரியாக உயர்ந்துள்ளது. இதனால் விவசாயிகள், பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.